## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | பி.வா.சா. | : 2 |
| பெயர் | : மாயம்மாள் | க/பெ. | : பூசாரி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : விளாம்பட்டி |
| தேதி | : 21.01.2026 | வயது | : 76/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

2) நான் இந்த வழக்கில் 4 ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கானது யாரால் யார் மீது போடப்பட்டுள்ளது என்றால் நான் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது தங்கை பொதியழகி மற்றும் அவரது பிள்ளைகள் மீது வழக்கு போட்டுள்ளேன். பூமிராஜா, ராமலிங்கம், முத்தழகி, ஜோதி, அழகநாச்சி ஆகியோர்கள் எனது மக்கள் என்றால் சரிதான். நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி நான் நல்ல மனநிலையில் உள்ளேன் என்றும், பிரதிவாதியாக வழக்கை நடத்த விரும்புவதாகவும் தெரிவித்தேன் என்றால் சரிதான். என்னால் நீதிமன்றத்தில் எனக்கு பதிலாக என் மகள் சாட்சியம் அளிக்க கோரி இ.ம.எண்.424/2017 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்தேன் என்றாலும், அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான். அந்த மனு உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3) பிரதிவாதிகள் தரப்பில் என்னை 4 ம் பிரதிவாதியாக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவில் நான் நேரடியாக ஆஜராகி எனது தரப்பில் 4 ம் பிரதிவாதியாக சேர்க்க ஒத்துக்கொண்டேன் என்றாலும், அதனடிப்படையில் மனு அனுமதிக்கப்பட்டது என்றாலும் சரிதான். தற்பொழுது நான் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அதனால் மேற்படி மனு உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. படித்துக் காண்பித்தார்களா என்றால் காது கேட்காது தெரியாது. (காது கேட்கவில்லை என்று சாட்சி சொன்னாலும் **(Hearing aid machine)** உதவியுடன் சாட்சி கேள்விகளை புரிந்து பதில் சொல்கிறார்.)

4) வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் பொதியழகி, அழகன், சின்னச்சாமி ஆகியோர்கள் அனுபவம் செய்து வருவதாக நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. முன்னுக்குப்பின் முரணாக சட்டத்திற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன்கள் மற்றும் மகள்கள் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை காட்ட வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், வீட்டுவரி ரசீது அல்லது கிஸ்தி ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் பொன்னம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றாலும், மேற்படி பொன்னம்மாள் என்பவருக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்றாலும், உரிமையில்லாத நபரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதால் மேற்படி கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் மோசடியானது என்றாலும், அது சட்டப்படி நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல.

5) வழக்குச் சொத்தை பொன்னம்மாள் தான் வைத்திருந்தார் என்பதற்கும், அவர் தான் சட்டப்பூர்வ உரிமையாளர் என்பதற்கும் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொன்னம்மாள் என்பவரிடமிருந்து எனது கணவர் பூசாரி அம்பலம் பாகம் பிரிக்கப்படாத சொத்தை கிரையம்

வாங்கியுள்ளார் என்றாலும், அதனால் சொத்து எனது கணவருக்கு சித்திக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல, அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் பூசாரி அம்பலத்திற்கு தான் சொத்து பாத்தியமானது என்பதற்கு வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், வீட்டுவரி ரசீது அல்லது கிஸ்தி ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் பூசாரி அம்பலம் இறந்ததற்கு பின் எனது மக்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

6) வழக்கு சொத்து தற்பொழுது பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றாலும், அவர்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், அதற்கான சட்டப்படியான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மகன் ராமலிங்கம் என்பவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் தரப்பில் பொய்யான விபரங்கள் சொல்லி என்னிடம் கையொப்பம் வாங்கியதாக சொல்லியுள்ளது முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் பொய்யான விபரங்கள் சொல்லி கையொப்பம் பெற்றதாக சொல்லும் நிலையில் அதற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

7) இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.31/2013 என்ற எண்ணில் பிராது சொத்து உள்பட பெத்தாயி பெயரிலுள்ள பிற சொத்துக்களையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்து அதில் நானும், எனது குடும்பத்தினரும் ஒரு தரப்பினராகவும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெற்றோர்கள் மற்றொரு தரப்பினராகவும் இருந்து

அதில் சமரசம் கண்டு வழக்கு சொத்து பெத்தாயி இறப்பிற்கு பிறகு 1ம் பிரதிவாதி பொதியழகிக்கு சேரவேண்டும் என்று தீர்வு காணப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி உண்மைகள் தெரிந்து இருந்தும் அதை மறைத்து பிரதிவாதிகள் மீது மோசடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வாதிகளுக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 21.01.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.01.21 17:46:46 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.